


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## பொருளாதார நெருக்கடியைக் காரணங்காட்டி தமிழ் மக்களிடம் மீண்டும் நெருங்கும் ரணில் தரப்பு



தமிழ் மக்கள் இந்த நாட்டில் தமது உரிமைகளைக் கோரி மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அஹிம்சை - ஆயுதம் என போராட்டங்கள் மாறுபட்டிருக்கலாம். ஆனால் போராட்டத்தின் வீரியம் குறையாமல். யாருக்கும் அடிபணிந்து அஞ்சாமல் பல சவால்களை சந்தித்து இன்றும் வீதியோரங்களில் கொட்டகைகளை அமைத்து தமது பிள்ளைகளைத் தேடி. உறவுகளைத் தேடி காத்திருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில். ஆட்சியில் இருக்கும் சிங்களத் தரப்பினர் தமிழ் மக்களை தமது தேவைக்காகப் பயன்படுத்துவதும். தமிழ் அரசியல்வாதிகளை போலியான வாக்குறுதிகளின் மூலமாக ஏமாற்றுவதும் காலங்காலமாகத் தொடர்கின்றது. விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்விடயத்தில் மாற்றங்கள் இருந்தது. அவர்கள் கூறுவதைக்கேட்டு தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டனர். ஆனால் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் இந்நிலைமைகள் மாறியுள்ளது.

நல்லாட்சியில் தமிழ் மக்களின் தேவை மைத்திரி - ரணிலுக்கு இருந்தது. தாங்கள் பதவிக்கு வர தமிழ் மக்களின். முஸ்லீம் மக்களின் வாக்குகள் தேவைப்பட்டது. தமிழ் அரசியல்வாதிகளையும் கூட்டுச்சேர்த்து செயற்பட்டனர். மஹிந்தவைப் பழிவாங்குவதாக நினைத்து. தமிழ் - முஸ்லீம் மக்களை இக்கூட்டணிகள் பழிவாங்கின. சாக்குப்போக்கெல்லாம் கூறி காலத்தையும் இழுத்தடித்து செய்ய வேண்டிய வேலைகள் ஏராளம் இருந்தும் செய்யாமல். வாக்குக்காக தமிழ் மக்களை ஏமாற்றியது ரணில் - மைத்திரி மாத்திரமல்ல. தமிழ் அரசியல்வாதிகளும் தான்.

அப்போதும் தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தத் தவறவில்லை. ஆனால் நடந்தது என்ன?. அதேபோன்றதொரு நிலைதான் இன்று மீண்டும் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினைக் காரணங்காட்டி. மீண்டும் தமிழ் மக்களை நோக்கி வந்துள்ளார் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சியில் பிரதமராகவிருந்த அவர். இன்று ஜனாதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார் மக்களது ஆணையின்றி இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம்.

சர்வதேச நாணய நிதியம் தான் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு என்று வருகின்றபோது. அது விதிக்கும் நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதேபோல ஐரோப்பிய யூனியனையும் பகைத்துக்கொள்ள முடியாது இலங்கையால். இலங்கை எதிர்பார்க்கும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்க வேண்டுமாயின் அவர்களின் நிபந்தனைகளை இலங்கை கட்டாயம் ஏற்கவேண்டிய நிலை இருக்கிறது. இவ்விரு அமைப்புக்களும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கானத் தீர்வு தொடர்பில் முக்கிய விடயங்களை வலியுறுத்துகின்றன இலங்கை அரசிடம். இனப்பிரச்சினைக்கானத் தீர்வினையும். பொருளாதார நெருக்கடிக்கானத் தீர்வினையும் மேற்குலகம் ஒரேகோட்டில் பார்க்கும் நிலை இன்று வந்துள்ளது. அவர்களின் பிரதிநிதிகள் இலங்கை வருகிறபோது அரச உயர் மட்டத்திடம் தமிழ் மக்களது விடயங்கள் குறித்து கலந்துரையாடுகின்றனர். தமிழ்த் தரப்பினையும் சந்திக்கின்றனர். தமிழ்த் தரப்பும் அவர்களிடம் கோரிக்கைகளை முன்வைக்கிறது. ஆனால் இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு இனப்பிரச்சினை முக்கிய காரணம்.

எனவே இன்றைய அரசு சர்வதேச ரீதியாக எழுகின்ற சவால்களைச் சமாளிக்க உள்நாட்டில் தமிழ் மக்களுக்கான விடயங்களைச் செய்யவேண்டும் என்பது கட்டாயம். இதனை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நன்கு உணர்ந்தவர் மஹிந்த ராஜபக்ஷவை விட. உலகில் மிகப் பெரும் செல்வந்தர்களாக இருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வரவேண்டுமெனில் சிங்கள ஆட்சியாளர்களின் மனநிலையில் மாற்றம் வேண்டும். இலங்கையில் போராட்டங்கள் நடப்பதையும். பயங்கரவாதச் செயற்பாடுகளையும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் சுற்றுலாப் பயணிளும் விரும்பவில்லை. அதிகாரப் பரவலாக்கல். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் போன்றவைக்கான தீர்வுகளை அரசு செய்யாதுவிடின். இலங்கையானது பொருளாதார ரீதியாக மேலும் மேலும் பாதிப்படையுமே தவிர. பொருளாதார ரீதியான இலக்குகளை அடைவது கடினம். தமிழ்த் தரப்பு நல்லாட்சியில் செய்த அதே தவறை இன்று மீண்டும் செய்ய முனைந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் மூன்றாந் தரப்பு ஒன்றின் அனுசரணையின்றி இடம்பெறுவது. "தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வதற்குச் சமன்".

## சி.எம்.டீ கெம்பஸ் திறப்பு விழாவும், மலேசிய மலாக்கா பல்கலைக்கழக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வும்

(நூருல் ஹுதா உமர்)





கல்முனை சி.எம்.டீ கெம்பஸ் திறப்பு விழாவும் மலேசிய மலாக்கா பல்கலைக்கழக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வும் கல்முனை சி.எம்.டீ கெம்பஸ் நிறைவேற்று பணிப்பாளர்களான எம்.ஏ.நழீர், பீ.எம்.நஸீம் முஹைதீன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சி.எம்.டி கெம்பஸ் தவிசாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் குழுக்களின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீலின் தலைமையில் புதன்கிழமை (04) மாலை கல்முனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் துனியா மலாய் துனியா இஸ்லாம் என்று அழைக்கப்படும் மலாய் இஸ்லாமிக் சர்வதேச செயலகத்தின் தலைவரும், மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநருமான கலாநிதி துன் முஹமட் அலி ருஸ்தாம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் மலேசிய மலாக்கா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அப்துல் ரஸாக் இப்ராஹிம் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும் மலேசிய மலாக்கா பல்கலைக்கழக பதிவாளர், அப்பல்கலைக்கழக உயர் நிர்வாகிகள், இலங்கைக்கான மலேசிய தூதரக அதிகாரிகள், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச். அப்துல் சத்தார், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் உட்பட பேராசிரியர்கள், துறைத்தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்ஸீன் பக்கீர், இலங்கை மின்சார சபை பிரதம நிறைவேற்று பொறியியலாளர் ஏ.ஆர்.எம். பர்ஹான், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை திட்டமிடல் வைத்திய அதிகாரி எம்.சி.எம். மாஹிர், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், சி.எம்.டி தனியார் பல்கலைக்கழக நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கல்முனை சி.எம்.டீ கெம்பஸ்ற்கும் மலேசிய மலாக்கா பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று சபையோர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

## உள்ளூராட்சி தேர்தலில் இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்பு – பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

உள்ளூராட்சி தேர்தலை தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்கக்கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக நீதிமன்றத்தினை நாடி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தினை கொடுப்போம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். சாவகச்சேரியில் ஊடகங்களுக்கு நேற்று (04) கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு தாக்கலுக்கான திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கட்சியின் சார்பிலே தேர்தல்கள் பிற்போடக்கூடாது. அது ஜனநாயகத்தினை மீறுகின்ற செயல் என தொடர்ச்சியாக கூறி வந்திருக்கிறோம். அரசாங்கம் இந்த தேர்தலினை பிற்போடுவதற்கு எடுத்த முயற்சிகள் எங்களுக்கு தெரியும். எதுவும் கைகூடாத நிலைமையில் தேர்தல் ஆணைக்குழு சட்ட ரீதியாக அறிவித்துள்ளது. இந்த வேளையில் இதனை தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்கக்கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக நாங்கள் நீதிமன்றத்தினை நாடி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தினை கொடுப்போம்.

சில வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்ற மாகாண சபை தேர்தலும் உடனடியாக நடத்தப்பட வேண்டும். மாகாண சபைகள் இயங்காமல் இருப்பது என்பது மிகவும் பாரிய பின்னடைவு. இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பினை பொறுத்தவரையில், எங்களின் மூலக்கிளையில், இருந்து இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பதாரிகளை முன்வருமாறு கோரியிருக்கிறோம். இந்த தடவை சரியானவர்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் இந்த தேர்தலில் முன் நிறுத்துவோம். மக்களின் ஆதரவினை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

## அணியில் இருந்து நீக்கப்பட்ட சஞ்சு சாம்சன்

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது T20 போட்டியிலிருந்து இந்திய அணியின் நட்சத்திர வீரரான சஞ்சு சாம்சன் விலகி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

முதல் ஆட்டத்தில் இந்தியா வென்ற நிலையில் 2வது போட்டி இன்று நடைபெற உள்ளது. இந்த நிலையில் இந்திய அணியின் நட்சத்திர விக்கெட் காப்பாளர் சஞ்சு சாம்சன் காயம் காரணமாக விலகி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் அவருக்கு பதிலாக ஜிதேஷ் ஷர்மா இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். முக்கிய தொடரில் இந்த நட்சத்திர வீரர் விலகி இருப்பது இந்திய அணிக்கு நெருக்கடியாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை T20 தொடருக்கான புதுப்பிக்கப்பட்ட இந்திய அணி: ஹர்திக் பாண்டியா(தலைவர்), இஷான் கிஷன், ருதுராஜ் கெய்க்வாட், சுப்மான் கில், சூர்யகுமார் யாதவ் (துணை தலைவர்), தீபக் ஹூடா, ராகுல் திரிபாதி, ஜிதேஷ் சர்மா, வாஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல், அக்சர் படேல், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷல் படேல், உம்ரான் மாலிக், சிவம் மாவி, முகேஷ் குமார்.



## இரு சூரிய கிரகணம், இரு சந்திர கிரகணம்

முழு சூரிய கிரகணம் உட்பட 4 கிரகண நிகழ்வுகள் நிகழாண்டு நடைபெற உள்ளது. இதில் 2 கிரகண நிகழ்வுகளை இந்தியாவில் காணமுடியும் என மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த வானியல் நிபுணர் தெரிவித்தார். நிகழாண்டில் நிகழும் கிரகணங்கள் குறித்து மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைனில் உள்ள அரசு ஜிவாஜி வானாய்வகத்தின் கண்காணிப்பாளர் ராஜேந்திர பிரகாஷ் குப்த் கூறியதாவது, நிகழாண்டில் இரு சூரிய கிரகணமும் இரு சந்திர கிரகணமும் நிகழ்கிறது. ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முழு சூரிய கிரகணம் தோன்றும். இந்நிகழ்வை இந்தியாவில் இருந்து காண இயலாது.

இதைத்தொடர்ந்து, மே மாதத்தின் 5,6 ஆம் திகதிகள் சந்திக்கும் இரவில் சந்திர கிரகண நிகழ்வு நடைபெறுகிறது. இந்நிகழ்வை இந்தியாவிலிருந்து பார்க்க முடியும். வளைய சூரிய கிரகண நிகழ்வு ஒக்டோபர் 14, 15 திகதிகளில் நடைபெறும். இந்நிகழ்வு இரவில் நடைபெறுவதால், இந்தியாவில் இந்நிகழ்வை காண முடியாது. அதே மாதத்தில் 28, 29 ஆம் திகதிகளில் நிகழும் பகுதியளவு சந்திர கிரகணத்தை இந்தியாவில் காணலாம் என அவர் தெரிவித்தார். சூரியனுக்கும் புவிக்கும் இடையே சந்திரன் வரும்போது சூரிய கிரணமும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே புவி இருக்கும் போது சந்திர கிரகணமும் நிகழ்கிறது.



## முட்டை விலை குறைவடையும் வாய்ப்பு

எதிர்வரும் வாரத்தில் முதல் தொகுதி முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். முட்டை விலை தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், கடந்த திங்கட்கிழமை கூடிய அமைச்சரவை, வர்த்தக அமைச்சருக்கு முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும், முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளமையினால், குறித்த தொழிலில் ஈடுபட்டுள்ள பெருமளவிலான மக்கள் பெரிதும் பாதிக்கப்படவுள்ளதாகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில் நேற்று சந்தையில் முட்டை ஒன்று 65 - 70 ரூபாவிற்கு இடையில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் முட்டையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு நுகர்வோர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மியான்மாரில் 7,012 பேருக்கு பொது மன்னிப்பு

பிரிட்டனிலிருந்து மியான்மார் விடுதலை பெற்று 75 ஆவது ஆண்டு விழாவையொட்டி, 7,012 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக அந்த நாட்டின் ராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லியாங் புதன்கிழமை அறிவித்தார்.

மேலும், இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்று சுதந்திர தின உரையின்போது அவர் வாக்குறுதி அளித்தார்.

மியான்மரில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது.

எனினும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி அவரது ஆட்சியை ராணுவம் கடந்த ஆண்டு பிப்ரவரி 1ஆம் திகதி கலைத்தது.



## இலங்கையில் பழங்களின் விலை அதிகரிப்பு

நாட்டில் அனைத்து வகையான பழங்களின் விலையும் உயர்ந்துள்ளதாக பொருளாதார மையங்களில் உள்ள பழங்கள் விற்பனையாளர்கள் கூறுகின்றனர். நெல்லி கிலோ ஒன்றின் விலை 1,200 ரூபாவாகவும், சிவப்பு திராட்சை கிலோ ஒன்றின் விலை 1,800 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ அன்னாசிப்பழத்தின் விலை 600 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் 100 கிராம் தோடம் பழத்தின் விலை 120 ரூபாவாகவும், 100 கிராம் பச்சை அப்பிள் பழத்தின் விலை 180 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ உள்ளூர் இனிப்பு தோட்டம் பழத்தின் விலை 600 ரூபா. ஒரு கிலோ நாட்டு மாம்பழத்தின் விலை 700 ரூபாவாகவும், ஒரு கிலோ ஆனைக்கொய்யா 500 ரூபாவாகவும் உள்ளது.

ஒரு கிலோ கொய்யாவின் விலை 700 ரூபா. இறக்குமதிச் செலவு அதிகரிப்பினால் பழங்களின் விலை அதிகரித்துள்ளதாகவும், போக்குவரத்துக் கட்டண உயர்வினால் உள்ளூர் பழங்களின் விலை அதிகரிப்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பழ விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் பழங்களின் விலை உயர்வால் விற்பனை குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



## இரயில் பயணிகளுக்கான அறிவிப்பு – இன்று முதல் வடக்கு ரயில் பயணம் நிறுத்தம்

வடக்கு ரயில் வீதியில் இன்று (05) முதல் ஐந்து மாதங்களுக்கு அனுராதபுரம் வரை மட்டுமே ரயில்கள் இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவ மற்றும் ஓமந்தை பகுதிகளுக்கு இடையிலான ரயில் வீதியின் நவீனமயமாக்கல் பணிகள் ஆரம்பிக்கப்படுவதால் கொழும்பில் இருந்து அனுராதபுரம் வரை மாத்திரம் ரயில் சேவையில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ்.குணசிங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளுக்கு அநுராதபுரத்தில் இருந்து பேருந்துகள் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.